# 'பிரபா' கடிதத்தை அரச தரப்பினர் ஆராய்வு

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 25 இதழ் 60
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 08-04-1995

[கொழும்பு]
விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவுக்கு நேற்று முன்தினம் எழுதிய கடிதம் அரசு உயர்மட்டத்தில் நேறறு ஆராயப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் நேற்று அவசரமாகக் கூடி ஆராய்ந்தனர்.

நான்காம் கட்டப் பேச்சு வார்த்தையை எதிர்வரும் 10 ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்த அனுமதி வழங்கி

(4-ம்பக்கம் பார்க்க)

மத்திய கிழக்கில்

## நிர்க்கதியற்ற நிலையில் இலங்கைப் பெண்கள்

[கொழும்பு]
மத்திய கிழககு நாடுகளில் வேலைபார்க்கும் இலங்கைப் பெண்கள் பெரும்பாலும் நிர்க்கதியற்ற நிலையில் இருப்பதை தற்போது காணக்கூடியதாக இருப்பதாக, தொழில் அமைச்சர் திரு, மகிந்த ராஜபக்ஷா நேற்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்; மத்திய கிழக்கு நாடுகளில் 5 லட்சம் இலங்கையர் வேலைசெய்கின்றூர்கள். இவர்களில் 85 வீதமானவர்கள்

(4ம் பக்கம் பார்க்க)

# 4-ம் கட்டப் பேச்சு யாழ்ப்பாணத்தில்

# அரசகுழுவை 10ம் திகதி வருமாறு

# ஜனாதிபதிக்கு 'பிரபா' கடிதம்

## புலிகளின் 4 கோரிக்கைகள் பற்றியே பேச்சு



[யாழ்ப்பாணம்]
நான்காம்கட்டப் பேச்சுக்கள் நடத்துவதற்கு அரச தூதுக்குழுவினரை நாளை மறுதினம் 10ம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணம் அனுப்பி வைக்குமாறு தமிழ்ழ தேசிய தலைவர் திரு. வே. பிரபாகரன் நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: உங்களது 1ஏப்ரல் 1995 திகதியிடப்பட்ட கடிதம், யாழ்ப்பாணத்திலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வாயிலாக 2 ஏப்ரல் 1995 அன்று எமக்கு கிடைக்கப்பெற்றது. மிகவும் நன்றி.

அரசாங்கத்தின் சமாதான தூதக்குழுவினர் 10 ஏப்ரல் 1995 அன்று யாழ்ப்பாணம் வருவதை நாம் வரவேற்கிறோம். பேச்சுக்களில் பங்குபற்றவிருக்கும் உங்களது தூதுக்குழுவினரின் பெயர் விடரங்களை அறியத்தரவும்,

## முக்கிய பிரச்னை பற்றி பேச்சு!

நீங்கள் ஏற்கனவே எடுத்துள்ள சாதகமான முடிவுகளை துடன் செயற்படுத்தும் நடைமுறை பற்றியும், எனது கடிதத்தில் (28-03-1995) நான் குறிப்பிட்டுள்ள இரு முக்கிய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பது பற்றியும் நான்காம் கட்டப் பேச்சுக்களின் நிகழ்ச்சிநிரல் அமையுமென்பதை நான் உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

24 மார்ச் 1995, நீங்கள் எனக்கு எழுதிய கடிதத்தில் எரிபொருள் மீதான தடைகளை நீக்குவதென்றும் மீன்பிடி மீதான சகல கட்டுப்பாடுகளையும் தளர்த்துவதென்றும் ஆக்கபூர்வமான முடிவுகளை எடுத்திருப்பதாக அறியத்தந்தீர்கள். அத்துடன் உங்களது முடிவுகளை சீரான முறையில் செயற்படுத்த இருதரப்பினரும் பேசவேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தீர்கள்.

## காலக்கெடு நீடிப்புகாரணம்

அதேசமயம் 28-03-1995 நான் உங்களுக்கு எழுதிய கடிதத்தில் பூநகரி. இராணுவ முகாம் அகற்றப்பட்டு யாழ்ப்பாணத்திற்கு ஒரு பாதை திறக்கட்படவேண்டும் எனவும் கிழக்கு மாகாணத்தில் எமது போராளிகள் ஆயுதங்களுடன் நடமாடவேண்டும் என்றும் நான் வலியுறுத்தியிருந்தேன். இவ்விரு முக்கிய பிரச்னைகள் பற்றியும் நீங்கள் எடுத்த முடிவுகளை நடைமுறைபப்டுத்துவது பற்றியுமே அடுத்தகட்டப்பேச்சுக்கள் அமையவேண்டும்

நீங்கள் எடுத்த முடிவுகளை உடன் செயற்படுத்தவும் மறைய இரு பிரச்சனைகளுக்கு உடன் தீர்வுகாணவும் அரசாங்கத்திற்கு கால அவகாசம் அளிக்கவே நாம் விதித்த காலக்கெடுவை 28-03-1995ல் இருந்து 19-04-1995 வரை நீடித்தோம் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

## அன்றாட பிரச்னை தீர்க்கப்படவேண்டும்

எமது மக்கள் எதிர்கொண்டு வரும் அவசரமான அவசியமான நாளாந்தப் பிரச்னைகளுக்கு தீர்வுகாண்பது அத்தியாவசியமானது என்பதை கடந்த ஆறுமாத காலமாக, சமாதானப் பேச்சுக்கள் தொடங்கிய காலத்திலிருந்து நாம் தொடர்ச்சியாக வலியுறுத்திவருகிறோம். ஆரம்ப கட்டப் பேச்சுவார்த்தைகளின் போது அன்றாடப் பிரச்னைகளுக்கு தீர்வு காணப்படவேண்டும் என்றும், இந்தப் பிரச்னைகளுக்கு சுமுகமான தீர்வு காணப்பட்டால் தேசிய இன நெருக்கடிக்கு அடிப்படையாகவுள்ள பிரச்னைகள் பற்றி பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு அது வாய்ப்பாக அமையுமென்றும் நாம் மீண்டும் மீண்டும் எடுத்துக்கூறி வந்திருக்கிறோம்.

(4ம் பக்கம் பார்க்க)

## பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் மோதல்

(கொழும்பு)
பேராதனை பலகலைக் கழகத்தில் புதிதாக அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் சிரேஷ்ட மாணவர்களுக்கும் இடையில் பெரும் மோதல் ஏற்பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகைகள் தெரிவித்துள்ளன,

அப்பத்திரிகைகள் மேலும் தெரிவிக்கையில்: இம் மோதலின் போது கூரான இரும்பு ஆயுதங்கள் பயன் படுத்தபபட

(4-ம் பக்கம் பாாககு)

நாடாளுமன்ற அமர்வு குறைப்பு

## அரச எம்.பிக்கள் எதிர்ப்பு

(கொழும்பு)
ஏப்ரல், மே மாதங்களில் நடாளுமன்றத்தின் சாதாரண அமர்வுகளை நடத்தாமல் அவசரகால சட்டத்தை நிறைவேற்றுவதற்காக மாதுதிரம் நாடாளுமன்றத்தை இரண்டு நாட்கள் மட்டும் கூட்டுவதற்கு அரசு எடுத்திருக்கும் முடிவை அரச தரப்பு எம்பிக்களே எதிர்த்துள்ளனர்.

ஏப்ரல் மாதத்தில் அவசரகால சட்டத்தை நிறைவேற்றுவதற்காக நாடாளுமன்றம் நேற்று முன்தினம் கூடியது தெரிந்ததே.

இந்தக் கூட்டத்தின்போது அடுத்த நாடாளுமன்ற அமர்வு மே மாதம் 11ம திகதி இடம் பெறும் என சபை முதல்வர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா ஆலோசனை ஒன்றை தெரிவித்தார்.

இதற்கு அரச தரப்பு எம். பி. வாசுதேவநாணயக்கார தமது எதிர்ப்பைத் தெரிவித்தார்.

ஏப்ரல் மே மாதங்களில நாடாளுமன்றம் இரு தினங்கள் மட்டுமே கூடும் என்ற முடிவு கட்சித் தலைவர்கள் கூட்

(4ம் பக்கம் பார்க்க)

## ஜெர்மனி இலங்கைக்கு 4 கோடி ரூபா உதவி

(கொழும்பு)
அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நிலவும் மோதல் தவிர்ப்பு உடன்பாடு சுமுகமாக பேணப்படுவது குறித்து ஜெர்மன் அரசாங்கம் மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

இதேவேளை இலங்கையின் அபிவிருத்தி திட்டங்களுக்கு 4 கோடி 46 லட்சம் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழஙகுவதற்கு ஜெர்மனி இணங்கியுள்ளது.

இந்த உதவி வழங்குவதற்கு இரு அரசாங்களுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் கடந்த புதன் கிழமையன்று பூர்த்தியாகின.

-ரி

அரசு – புலிகள் பேச்சுக்கு

## ஜெனிவாவில் பாராட்டு

[லண்டன்]

விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையில் இடம பெற்றுவரும் சமாதான முயற்சிகளுக்கு, ஜெனீவாவில் உள்ள ஒற்றுமை அமைப்பு பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இவ்வமைப்பு இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்: இலங்கையில் நீண்ட காலமாகத் தொடரும் யுத்தத்திற்கு முடிவு கட்டும் வகையில், இரு தரப்பும் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது என்றும் தெரிவித்துள்ளது.

க-சி

# தமிழக மீனவர்

## 19 பேரை காணவில்லை

[சென்னை)

தமிழகம் நாகபட்டினம் பகுதியிலிருந்து கடந்த புதன்கிழமை மீன்பிடிப்பதற்காக படகு ஒன்றில் புறப்பட்ட 19 மீனவர்கள் திடீரென காணமல் போய்விட்டதாக செய்திகள் தெரிவிக்கப்பட்டுள்ளதாயினும் இதுவரையில் அவர்கள் பற்றி எதுவித தகவலும் கிடைக்கவில்லை.

இதற்கிடையில் 19 மீனவர் வருடன் புறப்பட்ட படகை நடுக்கடலில் வைத்து வேறு ஒரு படகில் வந்தவர்கள் கட்டி இழுத்துச் சென்றதை சிலர் நேரில் பார்த்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. க-சி

## "கல்வி மனிதனுக்கு பெருமை தேடித் தரும்"

— பிரதி கல்விப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

''மனித வாழ்வில் கல்வி மனிதனுக்குப் பல வகையிலும் பெருமை தேடித் தாவுள்ளது. எனவே நாம் கல்வியில் ஊக்கம் உடையவர்ளாகத் திகழ வேண்டும்.''

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கப் பணிமனையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட தொழிற் பயிற்சி நெறியில் கலந்து கொண்ட யாழ். மாவட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. கோ. சி. வேலாயுதம் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைவர் வைத்திய கலாநிதி திரு. சி. சிங்கராசா தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் யாழ். மாவட்டத் திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்: மேலை நாடுகளில் தொழில் முன்னணிப் பயிற்சி நெறிகள் இன்று முதலிடத்தை வகிக்கின்றன. அதே போன்று எமது நாட்டிலும் தொழிற் பயிற்சி நெறிகளை ஊக்குவிப்பதன் மூலம், வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதோடு எமது நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும் இது பெரும் உந்து சக்தியாக விளங்கும் என்றார்.

162-சி

வி. ஒ. ஏ. விவகாரம்

## எவரையும் சந்திக்க அரசு தயாரில்லை

[கொழும்பு]

'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' வானொலி நிலையம் சம்பந்தமாக இரணவில அயல் கிராம மக்களையோ, ஐக்கிய தேசியக் கட்சியினரையோ சந்திக்கப் போவதில்லை என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக 'லக்பிம' பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்தபோது இரணவில வானொலி நிலையம் அமைப்பது சம்பந்தமான பிரச்னை எழுந்தது. இப்போது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமே இது விடயத்தில் மக்களை ஏமாற்றப் பார்க்கின்றது.

இரணவில பாதுகாப்புக் குழுவினர் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்தபோது, இது பற்றி விசாரணை செய்வதற்கு இரு அமைச்சர்களை அனுப்பி வைப்பதாக உறுதி அளித்திருந்தும், இதுவரை எந்த அமைச்சர்களும் இரணவில பக்கம் தலைகாட்டவில்லை என்றும் 'லக்பிம' பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

ம-சி

### கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். சுகாதாரச் சேவைகள் திணைக்களத்ினால் போயா தினங்களில் நடைபெற்று வரும் கருத்தரங்குத் தொடரில், எதிர்வரும் 15ம் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்கு யாழ். மத்திய மருந்தக மண்டபத்தில் 'தீவிர சுவாசம் தொடர்பான தொற்றுக்களும் அவை தொடர்பான சிக்கல்களும்' என்ற தொடரில் வைத்திய கலாநிதி சி. எஸ். நச்சினார்க்கினியன் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். -75


யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய

பழைய மாணவர் சங்க ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவித்தல்

காலம்:– 12–04–95 புதன்கிழமை பிற்பகல் 3 மணி

மேற்படி வித்தியாலயப் பழைய மாணவர்களையும் அங்கு படிப்பித்த ஆசிரியர்களையும் வருகை தருமாறு அழைக்கின்றோம்,

—த. துரைலிங்கம்
செயலாளர்

(சி-1441)


## தீவுப் பகுதி சென்ற பல வாகனங்கள் சேதம்

(கொழும்பு)

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற தேர்தலின் போது காரை நகருக்குக் கொண்டுவரப்பட்ட பல ஆடம்பர வாகனங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதாக 'ராவய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான இந்த வாகனங்கள், போரினல் சேதமடைந்திருக்கும் தீவுப்பகுதி வீதிகளில் ஓடியதால் பழுதடைந்துள்ளன.

இதனல் கடற்படையினர் உணவுப் பொருட்களைக் கொண்டு செல்வதற்குத் தற்போது வாகன வசதிகள இல்லாத நிலையில் உள்ளனர் என்றும் 'ராவய' பத்திரிகை மேலும் தெரிவித்தது. ம-சி

# வீட்டினுள் புகுந்து பொருட்கள் திருட்டு

[உடுவில்]

ஏழாலை - மத்தி காளி கோவிலடியில் ஒருவருடைய வீட்டில் வீட்டுக்காரர் இல்லாத சமயம் பார்த்து உடைத்து அங்கிருந்த 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டதாக சுன்னாகம் காவல் பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக காவல் துறையினர் அதே இடத்தை சேர்ந்த 14 வயது இளைஞனை ஒருவரை சந்தேகத்தின்பேரில் கைது செய்து விசாரணை செய்தபோது களவாடப்பட்டதாகக் கருதப்படும் பொருட்கள் அவரிடமிருந்து மீட்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

மக்கள் இடம் பெயர்ந்த குப்பிளான் பகுதியிலுள்ள வீடுகளில் இருந்து கிறில்கள், ஓடு, மரங்கள் கதவுகளைக் கழட்டி எடுத்துச் சென்ற மூன்று நபர்களை காவல் துறையினர் கைது செய்துள்ளனர். விசாரணைகளின் போது இவர்களிடமிருந்து மேற்படி பொருட்கள் மீட்கப்பட்டன. -109

### பொங்கல் விழா

[யாழ்ப்பாண்ம்]

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் வருடாந்தப் பங்குனிப் பொங்கல் விழா, இம்மாதம் 11ம் தேதி செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

### கலந்துரையாடல்

(நெல்லியடி)

வடமாராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள சனசமூக நிலையங்களின் முக்கிய நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் இன்று 8ம் திகதி சனி பிற்பகல் 2-30 மணிக்கு தம்பசிட்டி அ. த. க. பாடசாலையில் நடைபெறவுள்ளது. 162


UNIVERSITY OF JAFFNA SRI LANKA

MASTER OF SCIENCE IN BIOTECHNOLOGY

Application will be entertained by me up to15-05-95 from suitable qualified persons who wish to register for the Degree of Master of Science in Biotechnology.

''Graduates in chemical, biological, medical, dental, varterinary agricultural and engineering seiences will be considered, forward application with biodata All applicants will be required to sit for a qualifing examination and a viva Address correspondance to Registrar, University of Jaffna''

Registrar.
University of Jaffna
15-04 1995

(A-4863


## 12 பிரிட்டன் எம். பி.க்கள்

### இனப் பிரச்னை தீர்வுக்கு ஆதரவு

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பிரச்னைக்குத் தீர்வை எட்டுவதற்கு அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவதற்கு பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சம்மேளனத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 12 பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணக்கம் தெரிவிததாக நாடாளுமன்ற தெரிவுக் கமிட்டியின் உபதலைவர் ஏ. ஆர். எம். ஹகீம் தெரிவித்துள்ளார்.

தற்போது பிரித்தானிய நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருக்கும் இவர்கள் கன்சர்வேட்டிவ் கட்சி, தொழிற்கட்சி, லிபரல்கட்சி ஆகிய கட்சிகளைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் இலங்கைக்கு வரும் நேரத்தில் யாழ்ப்பாணம் சென்று விடுதலைப்புலிகளைச் சந்திக்கத் தயாராக இருக்கின்றார்கள் என்றும் ஹகீம் மேலும் தெரிவித்தார்.

-ம

## நல்லை ஆதீனத்தில் கோலம் போடல் போட்டி

(கொழும்புத்துறை)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் கோலம்போடல் போட்டி எதிர்வரும் 22ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 10ம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும், 15ம் திகதி சனிக்கிழமை, 16ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் பிறபகல் 2-30 மணி தொடக்கம் 5 மணிவரை தங்கள் சுட்டெண்களையும் போட்டிபற்றிய மேலதிக விதிமுறைகளையும் பெற்றுக் கொள்ளுமாறும் ஆதீன மேலாளர் திரு. சி. த. நடராஜன் தெரிவித்துள்ளார்.

154

# செய்திச்சிதறல்

### கல்வி கற்க வெளிச்ச வசதி

(ஆனைப்பந்தி)

கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் இயங்கும் பாடசாலை மாணவர்கள் தற்போது இரவு நேரத்தில் ரியூப்லைட் வெளிச்ச வசதியுடன் கல்வி கற்று வருகின்றனர். 101

### நிவாரண பொருட்கள்

(பண்டத்தரிப்பு)

சங்கானை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் 23, 24ம் ஆகிய இரு புள்ளிகளுக்கு இரண்டு கட்ட நிவாரணம் இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

சங்க கிளைகள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வரும் இந்த நிவாரணப் பொருட்களை இம் மாதம் 10-ம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 72

### மாணவர் சீருடை விநியோகம்

(அரியாலை)

யாழ்- மாவட்ட பாடசாலை மாணவர்- மாணவிகளுக்கான சீருடைத் துணிப்பார்சல் கடந்த 4ம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் வழங்கப்பட்டு வருகின்றது. 59

### வெற்றிலை தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் வெற்றிலைக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது இராணுவ நடவடிக்கையால் வெற்றிலைச் செய்கையாளர் இடம்பெயர்ந்துள்ளதால் வெற்றிலைச் செய்கை முற்று முழுதாகப் பாதிக்கப்பட்டுள்ளது. 162

### மாதாந்த கொடுப்பனவு

(ஆனைப்பந்தி)

வேலணை ஊர்காவற்துறை பிரதேச செயலர் பிரிவுகளிற்குட்பட்ட பொதுசனமாதாந்த உதவிப்பணம் பெறுவோருக்குரிய பெப்ரவரி மாதக் கொடுப்பனவு மற்றும் காசநோய், புற்றுநோய், தொழுநோய் என்பவற்றால் பாதிகப்பட்டோருக்கான உதவு தொகை என்பன தற்போது யாழ் பிரதம தபாலகத்தில் இயங்கும் மேற்படிபிரிவுகளின் தபாலகங்களில் வழங்கப்படுகின்றது. -101

### கண் நோய்

(அரியாலை)

யாழ். மாவட்டத்தில் நிலவும் கடும் வெப்பம் காரணமாக அநேகமானோருக்கு கண் நோய் ஏற்பட்டுள்ளது. மற்றும் பொக்குளிப்பான், கூவைக்கட்டு, சின்னமுத்து ஆகிய நோய்களும் ஏற்பட்டுள்ளன. -59

### சைவ சித்தாந்த மாநாடு

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் சைவ சித்தாந்த மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது. இதற்கான ஆலோசனைக் கூட்டம் கடந்த 2ம்திகதி நடைபெற்றது. -155

### மணிவாக்கு

உணர்ச்சியே வாழ்க்கைக் கப்பலை உந்தித் தள்ளும். பகுத்தறிவே அதை ஓட்டும் மாலுமி காற்று இல்லையென்றால் கப்பல் நகராது. மாலுமி இல்லையென்றால் கப்பல் மூழ்கி விடும்.

- ரஸ்கின்

# நமது நோக்கு

## விளையாட்டுத் துறை வளர...

ஒரு நாட்டின் மனித வளம் மேம்பாடடைய வேண்டுமாயின் கல்வி, தொழில்நுட்ப அறிவோடு விளையாட்டுத்துறை வளர்க்கப்பட வேண்டியதும் அவசியம்.

''சுவர் இருந்தால்தான் சித்திரம் தீட்டலாம்'' என்ற அனுபவ மொழியை நாம் மறந்துவிடலாமா?

சுகாதாரக் கல்விபற்றியும் மருத்துவக் கல்விபற்றியும் இன்று நாட்டிலே விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் பொருட்காட்சி மூலம் உடல்வளச் சங்கதிகளைச் சாதாரணப் பொதுமக்களும் அறிந்து கொள்ள வாய்ப்பேற்படுத்தியது.

இதேவேளை - சகல நாடுகளிலும் வளர்ந்துவரும் விளையாட்டுத் துறையில் நாம் எங்கு நிற்கிறோம்?

பாடசாலைக் கல்வியிலே அதற்குரிய இடம் என்ன? பாடசாலை, கோட்ட மாவட்டப் போட்டிகள் நடாத்தி முடிக்கப்படுகின்றன.

ஆனல் - உடற்கல்விப் போதனசிரியர்கள் தொகை எவ்வளவு?

யாழ். மாவட்டத்திலே சுமார் 500 பாடசாலைகள் உள்ளன ஆனல் 60 உடற்கல்விப் பயிற்சிபெற்ற ஆசிரியர்களே உள்ளனர்.

முன்பு - சென்னை சைதாப்பேட்டை வை. எம். சீ. ஏ. உடற்கல்வி நிலையத்திற்குச் சென்று பயிற்சி பெற்று வந்தனர்.

பயிற்சிக் கல்லூரிகளில் உடற்கல்வி ஒரு பாடத் துறையாக ஏற்படுத்தப்பட்டபின், எமது பகுதியில் எத்தனை ஆசிரியர்கள் பயிற்றப்பட்டனர்.

எனவே - யாழ். பல்கலைக்கழகம் இத்துறைபற்றிக் கவனம் செலுத்தி பட்டப்படிப்புக்கான ஒரு பாடமாக்கினல் இத்துறையின் தரம் மேலும் வளர்க்கப் பேருதவியாக இருக்கும்.

விளையாட்டு நுட்பங்கள், சர்வதேசச் சட்டவிதிகள், நடுவர்களாகக் கடமையாற்றப் பயிற்சி போன்றவை மாத்திரமல்லாது, முதலுதவி, உடற்கூற்றியல் போன்ற மருத்துவம் சார்ந்த அறிவினைத் தரும் பாடங்களையும் சேர்த்துப் பட்டதாரிகளை உருவாக்குதல் அவசியம்.

மூளைவளம் மாத்திரமல்லாது, உடல்வளம் மிக்க சமுதாயமாக மாறினல்தான், கூனிக் குறுகிப் போகும் நிலை மாறுமல்லவா?

தமிழகத்தில்

# வெடிகுண்டு வெடித்ததில் இரு தமிழ் இளைஞர் காயம்

(சென்னை)

விடுதலைப்புலிகள் ஆதரவாளர் எனச் சந்தேகிக்கப்படும் இரு இளைஞர்கள் தமிழக இராமநாதபுரம் மாவட்டத்தில் நாட்டு வெடிகுண்டு தயாரிக்கும் போது அது திடீரென வெடித்ததில் காயமடைந்துள்ளனர்;

காயமடைந்தஇருவரும்உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர் எனவும் பொலிஸ் அறிக்கைகள் தெரிவிக்கின்றன,

குறிப்பிட்ட இவ் இரு இளைஞர்களிடம் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் படங்கள் காணப்பட்டதாகவும் அவ் அறிக்கைகள் மேலும் தெரிவிக்கின்றன.

விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். க-சி

## |பலதும் பத்தும்|

### போன இடம்

கேள்வி: [1] இந்தியப் பயணத்தின்போது இலங்கை ஜனதிபதி சோனியா காந்தியைச் சந்தித்தாரல்லவா? அதற்கு முதல் நாளே அவரைச் சந்தித்த அமைச்சர் யார்?

பதில்: போக்குவரத்து அமைச்சர், சிறிமானி

கேள்வி: (2) இலங்கைஜனதிபதியின் நெருங்கிய உறவினர் தேர்தலில மாத்திரமல்லாது காலிலும் எகிப்தில் அடிபட்டுப் போனரல்லவா? ஜனதிபதிக்கு முன்பாகவே சோனியாவை அவரும் சந்தித்தாராம் யாரவர்?

பதில் :தம்பி அனுராதான்

கேள்வி: (3] பல இலங்கை அரசியல்வாதிகள் இந்தியப் பயணத்தின் போது பகவான் சத்தியசாயிபாபாவையும்சந்திக்கத்தவறுவதில்லை. அண்மையிற் சந்தித்த அரசியல் வாதியார்?

பதில்: இரண்டாம் கேள்விக்குரிய பதில்.

— மயூரன்

# இராசி பலன்

08-04-1995

சனிக்கிழமை

(தமிழுக்கு பங்குனி—25)

அட்டமி முன்னிரவு 9-11 வரை; சித்தயோகம், புனர் பூசம் பின்னிரவு 2-20 வரை இராகுகாலம் காலை 9-07 முதல் 10-47 வரை சுபவேளை மாலை 3-07 முதல் 4-37 வரை

மேடம்: விரோத உணர்வு, நம்பிக்கையீனம், அலைச்சல்

இடபம்: தொழில்லாபம், இனசனபெருமை, குடும்ப மகிழ்ச்சி

மிதுனம்: மனப்பயம், காரிய தாமதம், அகம்பாவம்

கடகம்: தெய்வீகசெலவு, கடும் உழைப்பு, முயற்சி வெற்றி

சிங்கம்: மனச்சுமை, நண்பர் விரோதம், வீண்விரயம்

கன்னி: உயர்ஸ்தானம் தற்பெருமை உறவினர் சகாயம்

துலாம்: விரோதிகளை ஜெயித்தல், பணவரவு, பயணம்

விருச்சிகம்: கெட்ட நினைவு, குடும்பபிரிவு, அமைதியின்மை

தனுசு: குமுறும் நெஞ்சம், வீண்வாதம், பயனற்ற செய்கை

மகரம்: சமயோசித முடிவு தொழில் சிறப்பு, உல்லாசம்

கும்பம்: அதிகாரிகள் பாராட்டு, புதியதிட்டம், சுபகாரியம்

மீனம்: எதிர்பாராத துன்பம், வாக்குப்பகை சகோதர பகை

— ஜோஸ்யர்

# மாதகல் மாணவருக்கு கனடாவிலிருந்து உதவி

(பண்டத்தரிப்பு[

''மாதகல் கல்விஅபிவிருத்திச் சபை'' இடம் பெயர்ந்த மாதகல் கிராம மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு பல்வேறு உதவிகளை செய்வது என்று தீர்மானித்துள்ளது.

கனடா நாட்டில் செயற்பட்டு வரும் கனடா மாதகல் நலன்புரிச்சங்கத்தின் உதவியுடன் மாதகலை சேர்ந்த மிக வறுமை நிலையிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கும், புதிதாக பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கும், ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கும் பல்வேறு உதவிகளை செய்து உயர் கல்வியில் இவர்களை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டு வருவதாக மாதகல் இடம் பெயர்ந்த மாணவர் கல்வி அபிவிருத்தி [சபை பிரமுகர் ஒருவர் தெரிவித்தார் 72-ரி

கிழக்கிலங்கை

# பல்கலை. விவகாரம் முடிவு எடுக்கப்படவில்லை

(கொழும்பு)

கிழக்கு பல்கலைக்கழகமான வந்தாறுமூலை பல்கலைக்கழக விவகாரம் தொடர்பாக நாடாளுமன்ற கட்டடத்தில் நேற்றுமுன்தினம் முக்கிய கூட்டம் ஒன்று நடைபெற்றதாயினும் எதுவித முடிவும எடுக்கப்படவிலலை எனத்தெரிவிக்கப்படுகிறது.

இந்த பல்கலைக்கழகத்தில் கலை, வர்த்தக முகாமைத்துவ பீடங்களை தொடர்ந்து வைத்திருப்பதா அல்லது வேறு பல்கலைக்கழகத்திற்கு மாற்றுவதா என்பது குறித்த விவகாரம் நீண்ட காலமாக இழுபறி நிலையில் இருந்து வந்ததும் தெரிந்ததே.

வந்தாறுமூலையில் அமைந்துள்ள இப்பல்கலைக்கழகத்தை அம்பாறைக்கு மாற்ற அரசு நடவடிக்கைகள்மேற்கொண்டு வருவதையடுத்து அதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. க-சி

# அரச சேவையில் பாகுபாடு காட்டப்படமாட்டாது

(கொழும்பு)

அரசாங்கசேவையில் புதிதாக நியமனங்கள் வழங்கும் போது, எந்தவித பாகுபாடும் காட்டப்படமாட்டாது என்று பொது நிர்வாகத்துறை அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார்.

1993ம் ஆண்டு பரீட்சையில் இலங்கை நிர்வாக சேவைக்கு 101 பேரை தெரிவுசெய்து, அவர்களுக்கு பதவி வழங்கும் வைபவம் நடந்தபோதே, அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது இனிமேல் அரசியல் தலையீடின்றி திறமைக்கே முன்னுரிமை அளிக்கப்படும். எந்தவித பாகுபாடும் காட்டப்படமாட்டாது'' என்றார். ம-ரி

# சிறப்பாக நடைபெறும் மருத்துவக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடமும், விஞ்ஞான மன்றமும் இணைந்து நடத்தும் மருத்துவக் கண்காட்சி, மருத்துவ பீட வளாகத்தில் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. நாளை 9ம் திகதி வரை நடைபெறும் இக்கண்காட்சியில், மருத்துவம் சம்பந்தமான பல வகையான அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

9 பிரிவுகளாக அமைக்கப்பட்டிருக்கும் இக்கண்காட்சியில் நோய்கள் பற்றிய அறிவுறுத்தல்கள் பற்றியும். அவைகளைக் கண்டறியும் வழிமுறைகள் பற்றியும், இதனல் ஏற்படும் சிக்கல்கள் பற்றியும், அதற்கான தடுப்பு முறைகள் பற்றியும் சகலரும் எளிதில் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் சித்தரிக்கப்பட்டுள்ளது. நோய்களை இனம கண்டறியும் வழிமுறைகள், அவைகளுக்குச் செய்யவேண்டிய முதலுதவிச் சிகிச்சை முறைகள் பற்றியும் இக்கண்காட்சியில் தெளிவாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் சென்று பார்வையிட்டு வரும் இக்கண்காட்சியில், மக்களின் தேவை அவைகளுக்கு ஏற்ற வகையிலான சிகிச்சைகளும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலுமிருந்து பாடசாலை மாணவர்கள் தினமும் பெருமளவில் வருகை தந்து இக்கண்காட்சியைப் பார்த்துச் செல்கின்றனர். —— 162-ரி

### முகாமைத்துவ கற்கை நெறி

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புகள் ஏற்பாட்டில் அலுவலக முகாமைத்துவம் அடிப்படைக் கற்கை நெறி இன்று 08ம் திகதி சனிக்கிழமை பி.ப 2-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியற் துறை மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

### யோகர் சுவாமி குருபூசை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் இம்மாதம் 10ம் திகதி யோகர் சுவாமியின் குருபூசை அதிபர் சி. ஆ சோதிலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

காலை 8மணிமுதல் யோகர் சுவாமியின் திருவுருவப்படம் மங்கள இசையுடனும் சிவ அருட்பாடகர்கள் திரு.வ. நடராஜா, திரு. க. கணேசதாசன் குழுவினரது பஜனையுடனும் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு விழாஆரம்பமாகும். 154

### இன்று

(வேலணை)

இலங்கை தேசிய கயரோக தடுப்புச்சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளையின் கூட்டமொன்று இன்று 8ம் திகதி சனிக்கிழமை காலை 10 30 மணிக்கு யாழ்ப்பாண மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் வைத்திய கலாநிதி கு. மகேசன் தலைமையில் நடைபெறவிருக்கின்றது. 75-154

0 0

(யாழ்ப்பாணம்)

அரியாலை சன சமூக நிலையம் பாலர் விளையாட்டுச் சிறார்களின் விளையாட்டுப் போட்டிகள் இன்று 08ம் திகதி சனிக்கிழமை பி-ப 2-00 மணிமுதல் நடைபெறும்.

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995-04-08**

சனி இரவு

08-02 புரட்சிக் குரல்
08-05 நிகழ்வும் பகிர்வும்
08-20 நேயர் கடிதங்கள்
08-30 செய்திகள்
08-40 கலந்துரையாடுவோம் ''தமிழீழத்தில் உற்பத்தியின் அவசியம்''

**1995-04-09**

ஞாயிறு காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 களத்தில் மலர்ந்தவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானெலி மாலை ஒலிபரப்பு

**1995—04—08**

சனி மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05-10 புதியவை
05-15 வேங்கையின் நெஞ்சம்
05-30 அறிவியல் வினடி வினப் போட்டி
06-00 சிந்தனைக்குச் சில வினடிகள்
06-02 பாமாலை
06-15 என் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

### தவக்கால நற்சிந்தனை

''அவர்களைத் தூய்மைப் படுத்துவோம், அப்போது அவர்கள் நம் மக்களாய் இருப்பார்கள்''.

(எசேக் 37:2)

கறைபடிந்த உள்ளத்தோடு கடவுளை அடைய முடியாது. குறைகளைக் களைந்து இதயசுத்தியோடு இறைவனை நாடவேண்டும். எனவே எம்மை தூய்மைப் படுத்தவேண்டும். தூய்மை எமது வாழ்வின் வாய்மையாக மாறவேண்டும். அசுத்தம் எம்மை மாள்விக்கும். சுத்தம் வாழ்விக்கும்.

— தா. மைதிலி

தடையெல்லாம் உடைத்திடலாம்
தரிசு நிலமெல்லாம் பயிர் செய்தால்

# பிரச்னைக்கு தீர்வுகாணும் அரசியலமைப்பு வேண்டும்

(கொழும்பு)

இலங்கையைப் பொறுத்த வரையில் அரசியலமைப்பு என்பது மாறி மாறி ஆட்சிகளுக்கு வருபவர்களால் மாற்றப்படும் ஒரு விடயமாக மாறி விட்டது என்று வீரகேசரி பத்திரிகை தனது ஆசிரிய தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;- அரசியலமைப்பு புத்தகம் ஒரு பருவ கால வெளியீடு போல மாறி விட்டது. ஆனல் நாட்டின் பிரச்னைகள் அனைத்துக்கும் தீர்வு காணக்கூடிய ஒரு அரசியலமைப்பு இதுவரை முன் வைக்கப்படவில்லை.

தற்போது தயாரிக்கப்பட்டு வரும் அரசியலமைப்பு ஒரு நிரந்தர தன்மை வாய்ந்ததாகவும் தேசிய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதாகவும் அமைய வேண்டியது அவசியம். அரசியல் வேறுபாடுகளை மறந்து தேசிய நலனில் அக்கறை கொண்டு அரசியல் கட்சிகள் செயற்படுவதே இதற்கான நிலையை ஏற்படுத்துவதாக இருக்கும் என்றும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

# 4-ம் கட்ட பேச்சு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆயினும், இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உருப்படியான நடவடிக்கைகள் எதையும் எடுக்காது அரசாங்கம் காலம் தாழ்த்தி வந்ததால் பேச்சுக்கள் அர்த்தமிழந்து மந்தநிலை அடைந்தது. இந்தச் சூழ்நிலையில்தான் நாம் ஒரு காலக்கெடுவை விதிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டோம்பேச்சுவார்த்தையில் பங்குபற்றும் ஒரு தரப்பினர் என்ற ரீதியில், பேச்சுக்களிலிருந்து விலகிக் கொள்ளும் நோக்குடன் காலக்கெடுவை விதிக்கும் உரிமை எமக்குண்டு என்பதை நான் உங்களுக்கு கடைசியாக எழுதிய கடிதத்தில் விளக்கியிருந்தேன்.

பேச்சுக்கள் உருப்படியான பயனைத்தராது. எமது மக்களின் நன்மைகளைப்பேணுது, அர்த்தமற்றதாக இழுபட்ட காரணத்தினுல் நாம் இந்த முடிவை எடுக்க நேர்ந்ததாக சுட்டிக்காட்டினேன். ஆயினும் நீங்கள் சாதகமான முறையில் பதில் எழுதியதால், உங்களது முடிவுகளை நடைமுறைப்படுத்துவீர்கள் என்ற நம்பிக்கையிலும் ஏனைய பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பீர்கள் என்ற எதிர்பார்ப்பிலும் நாம் எமது காலக்கெடுவை 19 ஏப்ரல் வரை நீடிப்பதற்கு தீர்மானித்தோம்.

## முடிவை நடைமுறைப்படுத்துக

ஆகவே, எதிர்வரும் நான்காம் கட்ட சுற்றுப்பேச்சு, உங்களது முடிவுகளை உடன் நடைமுறைப்படுத்துவது பற்றியும் ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வுவைப்பது பற்றியுமே முக்கிய கவனம் செலுத்தும் என எதிர்பார்க்கிறேம் 19 ஏப்ரல் 1995க்கு முன்னராக உங்கள் முடிவுகளை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளும், மற்றைய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதும், இடம்பெறுமென நான் நம்புகிறேம்;

## அரசியல் பேச்சுக்கு சமாதானசூழல்வேண்டும் இன்றையசூழ்நிலைஉகந்தல்ல

எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் அதிமுக்கியமானவை என்பதால்' இப் பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு காணப்பட்டதன் பின்னரே இனப் பிரச்சினைக்கு அடிப்படையான அரசியல் பேச்சுக்கள் நடைபெறவேண்டும் என நாம் விரும்புகிறேம். எமது மக்கள் மீது விதிக்கப்பட்ட தடைகள், கட்டுப்பாடுகள் அனைத்தும் நீக்கப்பட்டு இயல்புநிலை தோற்றுவிக்கப்பட வேண்டும் என்பதும், போர் நிறுத்தம் நிலையானதாகி உறுதியான சமாதான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டுமென்பதும்,

அதன் பின்னரே உயர் மட்ட ரீதியில் அடிப்படையான அரசியல் பேச்சுக்கள் ஆரம்பமாக வேண்டும் என்பதும் எமது நிலைப்பாடாகும். எனவே, இன்றைய சூழ்நிலையில் அரசியல் பேச்சுக்களுக்கான கால அட்டவணை, நிகழ்ச்சி நிரல் தயாரிப்பதுபோன்ற விடயங்கள் பற்றி பேசுவது உகந்தது அல்ல என்றே நாம கருதுகிறேம் என்றும் அக்கடிதத்தில தெரிவிக்கப்பட்டுள்ளது. வி-ரி

# தீவுப்பகுதிமக்கள்6மணிக்கு பின் நடமாட கட்டுப்பாடு

(ஆனைப்பந்தி)

மாலை ஆறு மணிக்குப் பின்னர் பக்கள் வீதிகளில் நடமாடக்கூடாதென்ற கட்டுப்பாட்டினை ஈ பி டி. பியினர் புங்குடுதீவிலும் விதித்திருப்பதாக தெரியவருகின்றது.

இப்பகுதி மக்களுக்கு இக் கட்டுப்பாடு பிரச்னையாக தோன்றுவதில்லையென்றும், மக்கள் ஐந்து மணியளவிலேயே கேற்றுகளை மூடிவிட்டு வீடுகளுக்குள் முடங்கி விடுவதனல் அவர்கள் வெளியில் நடமாட வேண்டிய தேவை ஏற்படுவதில்லையென்றும் அங்கிருந்து வருகை தந்தோர் தெரிவித்தனர். 101-ரி

# வடகிழக்கு புனரமைப்புக்கு உலகவங்கி உதவும்

(கொழும்பு)

பாரிஸில் இந்தமாதம் 27ம் திகதி கூடவிருக்கும் உலக வங்கி வடக்கு கிழக்கு புனர்நிர்மாண புனர்வாழ்வு வேலைகளுக்கு மேலதிக நிதி உதவி அளிப்பதற்கான உறுதிப்பாட்டை தெரிவிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை யாழ்ப்பாண குடாநாட்டை புனரமைத்து மீண்டும் கட்டியெழுப்புவதற்கு பாரிய அளவில் உதவுவதற்கு சர்வதேச சமூகம் தயாராக இருப்பது குறிப்பிடத்தக்கது. ரி

## ஒய்வூதிய வவுச்சர்

[மானிப்பாய்]

யாழ் மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களம் ஒய்வூதியர்களின் ஏப்ரல் மாதத்திற்குரிய ஒய்வூதிய வவுச்சர்களும் காசோலைகளும் யாழ் செயலக ஒய்வூதியப் பிரிவிலிருந்து நேற்று உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 71ரி

## உப அஞ்சல் அதிபர் பதவி விண்ணப்பம்

[யாழ்ப்பாணம்]

யாழ் பாஷையூர், திருநெல்வேலி, நாச்சிமார்கோவிலடி, அரியாலை, ஆனைப்பந்தி ஆகிய இடங்களில் உப அஞ்சல் அதிபர்களுக்கான பதவி வெற்றிடங்கள் கோரப்பட்டுள்ளன.

இதுதொடர்பான விபரங்கள் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் வெளிவந்துள்ளது. ரி

## ஷார்ஜா கிரிக்கெட் : இந்தியா தோல்வி

(சார்ஜா)

ஷார்ஜா கிரிக்கெட் போட்டியில் நேற்று இந்தியா, பாகிஸ்தானிடம் 97 ஓட்டங்களினுல் தோல்வியடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 267 ஓட்டங்களைப் பெற்றது. இன்சுலாஹக் 88, வசிம் அக்கிரம் 50 ஓட்டங்களைப் பெற்றனர்.

இந்தியா 43ஓவர்களில் அனைத்து விட்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 169 ஓட்டங்களைப் பெற்றது. சித்து-54. மஞ்சேகர் 50 ஓட்டங்களைப் பெற்றனர்.

இன்றைய ஆட்டத்தில் பங்களாதேஷை எதிர்த்து பாகிஸ்தான் மோதுகின்றது. விரி

# வைத்தியசாலைகளுக்கு மருந்து விநியோகம்

(பண்டத்தரிப்பு)

யாழ் சுகாதார பிராந்தியத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு இவ்வருட இரண்டாம் கந்தாயத்திற்கான மருந்துவகைகளை கொழும்பிலிருந்து கப்பல்மூலம் கொண்டு வந்து விநியோகிப்பதற்கு யாழ். சுகாதார திணைக்களம நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அடுத்த வாரம் இங்கு வந்து சேரவிருக்கும் கப்பல் ஒன்றில இந்த மருந்து வகைகள் இங்கு வரவிருப்பதாக யாழ். சுகாதார திணைக்கள உயரதிகாரி ஒருவர் இது பற்றி தகவல் தருகையில் தெரிவித்தார். 72

## நாடாளுமன்ற

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டத்தில் எடுக்கப்பட்டது இதில் எதிர்க்கட்சிகளின் தலைவர்களும் சமூகமளித்திருந்தனர். சமசமாஜக் கட்சித் தலைவர்களும் இந்தக் கூட்டத்துக்கு சமூகமளித்திருந்தனர் என்று பிரதி சபாநாயகர் அனில் முனசிங்க இந்த சந்தர்ப்பத்தில் திரு. வாசுதேவநாணயக்காராவுக்குத் தெரிவித்தார். (இ-ரி)

# பட்ட பகலில் விடுபுகுந்து பணம் நகைகள் திருட்டு

[ஆனைப்பந்தி]

பட்டப்பகலில் வீடு புகுந்த திருடர்கள்சுமார்பத்துப்பவுண் நகை மற்றும் ரொக்கப்பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர். கொக்குவில் கிழக்குபகுதியில் தெ.ஜெயபாலன் என்பவருடையவீட்டில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவதினம் வீட்டார் வீட்டில் இல்லாத சமயம் உட்புகுந்த திருடர்கள் சுமார் பத்துப் பவுண் நகைகளுடன் ஐயாயிரம் ரூபா வரையான ரொக்கப் பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளதாகவும்,

இச்சம்பவத்தையடுத்து கொடுக்கப்பட்ட முறைப்பாட்டின்படி மூன்று சந்தேகநபர்கள் கைதுசெயயப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (101-ரி)

## பேராதனை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட மாணவர்களை பல்கலைக் கழக விரிவுரைகளுக்கு கலந்து கொள்ள தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

ட்ராக்கிங் தொடர்பாகவே மாணவர்களிடையே மோதல் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. க-ரி

# செயன் முறை கற்றல் அபிவிருத்தி செயலமர்வு

[யாழ்ப்பாணம்[

செயல்முறைக் கற்றல் - கற்பித்தல் கருமத் தொடர் அபிவிருத்திக்கான செயலமர்வு எதிர்வரும் 10, 11, 12ம் திகதிகளில் யா/டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் பி. ப. 8-30 மணி தொடக்கம பி. ப. 4-30 மணிவரை நடைபெறும்: இச் செயலமர்வுக்கு தங்கள் பாடசாலையில் ஆரம்ப வகுப்புகளில் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களையும் தவருறு அனுப்பி வைக்குமாறு அதிபர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறுர்கள். (ரி)

## கைதடியில் கலைவிழா

(யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையமும் கலைக்குழு நிர்வாகமும் நடாத்தும் மாதாந்த கலைவிழா இன்று இரவு 7 மணியளவில் மேறபடி நிலைய கலையரங்கில் திரு. க. இராசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்புரைகள், பட்டிமன்றம், சிறுவர் நடனம் உட்பட. 'இனியொரு விதிசெய்வோம்', 'சூரியனை சுட்டெரிப்போம்' போன்றநாடகங்களும் நடைபெறவுள்ளன. ரி

## மத்திய கிழக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெண்கள் இவர்களில் பெரும்பாலானவர்கள் கொழும்பிலுள்ள போலி முகவர்கள் மூலம் அங்கு வேலைக்குச் செல்வதினுல் அவர்களின் நலன்களுக்கு உத்தரவாதம் கிடைக்காமல் பெரும் இன்னல்களுக்கு ஆளாகின்றுர்கள். இதனுல் மனமுடைந்த நிலையில் மேற்படி நாடுகளில் வருடாந்தம் ஆறு பெண்கள் தற்கொலை செய்கின்றுர்கள். நூற்றுக்கணக்கானபெண்கள் மனநிலை பாதிப்புக்குள் ளாகின்றுர்கள். நூற்றுக்கணக்கானேர் தூதரகங்களில் தஞ்சமமடகின்றுர்கள். பலர் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்படுகின்றுர்கள்.

அடுத்தவருடம் லெபனுனில் மூன்றுலட்சம் இலங்கையர்க்கு வேலைவாய்ப்பு உள்ளது. இதில் பெரும்பாலும் ஆண்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் கூறினர், விரி

# கவிதை கட்டுரை பேச்சு.போட்டிகள்

[பண்டத்தரிப்பு]

வலிகாமம் மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகம் வலிகாமம் மேற்கு சனசமூக நிலையங்களுக்கிடையில் நடாத்தவுள்ள கவிதைப்போட்டி, கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி ஆகிய பல்வேறு போட்டிகள் நாளை 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சித்தன் கேணி ஸ்ரீ கணேசவித்தியாலய மண்டபத்தில் நடைபெற விருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு. கா. சந்திராசா இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளார்' 72

## பிரபா கடிதத்தை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. பிரபாகரன் இந்தக் கடிதத்தை ஜனுதிபதிக்கு எழுதியுள்ளார்.

இதேவேளை புலிகளுடன் பேச்சுவார்த்தை நடதத யாழ்ப்பாணம் வரவுள்ள அரச தரப்புக் குழுவில் இரு சிரேஷ்ட அமைச்சர்கள் முக்கியமாக இடம்பெறுவர் என ஏஜென்ஸிசெய்திகள் தெரிவித்த. இரி

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 8ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது,
Registered as a Neaws paper at the General Post office Sri Lanka under Liecence number B/1633613,